<u>பொள்ளாச்சி நகராட்சி</u>

<u>சாதாரணக் கூட்டம்</u>

**30.11.2023 தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம் நடவடிக்கைகள்**

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருள் விபரம்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சியில் பொறியர் பிரிவில் 2019ல் கீழ்க்கண்ட ஒப்பந்த பணிக்காக ஒப்புந்ததாரர் திரு.R.சுப்பிரமணியம் என்பவரின் ஒப்பந்த பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.2092858/- ஆகும். இத்தொகை 3 வருடங்களுக்கு மேலானதால் இதனை காலங்கடந்த வைப்புநிதி பதிவேட்டில் கொண்டு செல்லப்பட்டுள்ளது. தற்போது மேற்படி தொகை ரூ.2092858/-ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><table><tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>5% WH தொகை (2019)</th></tr><tr><td>1.</td><td>IUDM – Providing BT surface burial ground road, kottampatti indhira nagar, church road & other roads.</td><td>20,92,858/-</td></tr></table><br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி தொகையை அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.9403/2023/பி4</td><td>தீர்மானம் எண். 770<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டின் வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் மற்றும் வடிகால்நிதி, மற்றும் ஆரம்ப கல்விநிதி கணக்குகளை பதிவேடுகளுடன் இணக்கம் செய்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி 2022-2023 ஆம் ஆண்டு கணக்குகளை P.ஆதீஷ்வரன் Consultant மூலம் முடித்து இணக்கம் செய்யவும் அதற்காகும் செலவினம் ரூ.1,00,000-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1059/2016/பி1</td><td>தீர்மானம் எண். 771<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>3</td>
<td>பொள்ளாச்சி நகராட்சியில் பாதாள சாக்கடை பணிக்கு Deep Search metal detector with complete set (DSMD control unit, Headphone (Heavy Duty), DSMD Battery charger, Search Head with telescopic handle) விநியோகம் செய்தல் பணிக்கு ரூ.73750/- க்கு 13.10.2023 ஆம் தேதியில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.<br>
<table>
<tr><td>1.</td><td>M/s.Nunes Instrumentation, Coimbatore.</td><td>ரூ.73750/-</td></tr>
<tr><td>2.</td><td>M/s. IE Instrumentation, Salem.</td><td>ரூ.87910/-</td></tr>
<tr><td>3</td><td>M/s. Test Instrumentation, Coimbatore.</td><td>ரூ.89680/-</td></tr>
</table>
<br>வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவானதாக விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Nunes Instrumentation, Coimbatore அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
1. மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.699, நாள்.29.09.2023-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>
2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Nunes Instrumentation, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
3. பணியின் அவசியம் கருதி நகர மன்றத்தின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்: 7080/2023/இ1</td>
<td>தீர்மானம் எண். 772<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>4</td>
<td>நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தின், பேருந்துகள் நுழைவு வாயிலில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ள காரணத்தினால், புதிதாக சிறுபாலம் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4,50,000/-க்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4,50,000/-க்கு நகரமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை நகரமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்: 6005/2023/இ1</td>
<td>தீர்மானம் எண். 773<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 5 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 36 வரையிலான வார்டுகளுக்கு (UGSS) பாதாள சாக்கடை திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட Machine hole chamber பகுதியில் நகரத்தில் ஏற்பட்டுள்ள கனரக வாகனங்களின் அதிக போக்குவரத்து காரணமாக, அவ்வப்பொது ஏற்படும் அடைப்புகளை சரி செய்யும் போது Machine hole chamber திட்டத்தின் போது, ஏற்படும் பழுது மற்றும் தார் சாலை சீரமைப்பின் போது சாலையின் உயரம் அதிகமாவதால் UGSS Machine hole chamber-யும் சாலையின் மேல்மட்டத்திற்கு உயரப்படுத்த வேண்டியுள்ளது.<br>எனவே, Machine hole chamber Cover மாற்றுதல் உயரப்படுத்துதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள நகர மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**ந.க.எண். 9147/2023/இ1** | **தீர்மானம் எண். 774<br>அனுமதிக்கப்பட்டது** |
| 6 | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட மரப்பேட்டை பகுதி முதல் கண்ணப்பன்நகர் வரை செல்லும் ஓடை உள்ளது. (மரப்பேட்டை பள்ளம்) இந்த ஓடையில் பெரியார் காலனி கிழக்கு, மேற்கு, சிடிசி காலனி தென்பகுதி, கண்ணப்பன் நகர் பகுதி வரையிலும், மழைக்காலங்களில் வெள்ளத்தால் அடித்து வரப்பட்டு மண் மேடுகளால் உள்ளது. தற்பொழுது வரும் மழைக்காலங்களில் வரக்கூடிய மழைநீர் தேக்கமடையும் பொழுது அருகில் உள்ள தாழ்வான பகுதி குடியிருப்புகளுக்கு சென்று விடும் நிலை உள்ளதால் அந்த ஓடைப்பகுதியை தூர்வாரி கரைகளை பலப்படுத்த வேண்டி உள்ளதால் ஓடையை தூர்வாரி கரைகளை பலப்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/–க்கு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**ந.க.எண். 9217/2023/இ1** | **தீர்மானம் எண். 775<br>அனுமதிக்கப்பட்டது** |
| 7 | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் JCB வாகனம் எண் TN 41 T 4279 வாகனத்திற்கு புதிய மின்கலம் (Battery) கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.9166/2023/எச்2** | **தீர்மானம் எண். 776<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 8 | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் Ashok Leyland வாகனம் எண் **TN 41 AH 2012** வாகனத்திற்கு பழுதுகள் நீக்கம் செய்து தகுதிச்சான்று பெறும் பணிக்கு ஆகும் தோராய செலவினமாக **ரூ.2,50,000/-** ஆகும். இச்செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.08047/2023/எச்2** | **தீர்மானம் எண். 777**<br>**அனுமதிக்கப்பட்டது** |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**